# கள வழிகாட்டி

## கடல் பறவைகளைக் கையாளுதலும் கொண்டுசெல்லுதலும்



REEFWATCH
MARINE CONSERVATION

reefwatchindia.com 6360249764 projectcoordinator.tele@reefwatchindia.org

# பங்காளர்கள்

REEFWATCH
MARINE CONSERVATION

ROHINI
NILEKANI
*philanthropies*

# பொருளடக்கம்


| பக்கம் எண் | உள்ளடக்கம் |
|---|---|
| 1. | கடல் பறவைகள் என்றால் என்ன? |
| 2. | கடல் பறவைகளை எவ்வாறு அடையாளம் காணலாம்? |
| 3. | நீங்கள் காணக்கூடிய கடல் பறவைகள் |
| 5. | அறிக்கை |
| 7. | உபகரணங்கள் |
| 8. | கடல் பறவைகளைப் பிடித்தல் |
| 9. | கடல் பறவைகளைக் கையாளுதல் |
| 10. | இடமாற்றம் |
| 11. | ஓர் இறந்த பறவையைப் பற்றி அறிவித்தல் |
| 12. | கவனமாக இருங்கள் -செய்யக் கூடாத தவறுகள் |
| 13. | முக்கிய தொடர்புகள் குறிப்பு |

## கடல் பறவைகள் என்றால் என்ன?

கடல் பறவைகள் தங்களின் பெரும்பாலான வாழ்நாளைக் கடலின் அருகிலும் கடலின் மேற்பரப்பிலும் கழிக்கின்றன.

கடல் பறவைகளின் வாழ்க்கை முழுமையாகக் கடலைச் சார்ந்து வாழ்பவை. அவை பெரும்பாலும் கடலின் மேல் அல்லது அருகேதான் காணப்படும். எனவே அவற்றிற்கு மனிதர்களைப் பார்ப்பதும், குரலைக் கேட்பதும், மனிதர்களால் கையாளப்படுவதும் வழக்கமானவை அல்ல.

கோவா கடற்கரையில் சுமார் 20 வகையான கடல் பறவைகள் பொதுவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உடல் அமைப்பும், பழக்கவழக்கங்களும், கடலின் கடினமான சூழலிலும்கூட வாழ்வதற்கு அனுகூலமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.



## குறிப்பு

# முக்கிய தொடர்புகள்

**ரீஃவாட்ச் பெங்களூரு:** 6360249764

**வனத்துறை:**

**24x7 உதவி எண்**



# கடல் பறவைகளை எவ்வாறு அடையாளம் காணலாம்?


கடல் பறவைகளை அடையாளம் காண்பதற்குப் பின்வரும் அம்சங்களை கவனிக்கவும்:




இவைகளின் கால்விரல்களில் சவ்வால் இணைக்கப்பட்ட வலை போன்ற அமைப்பு இருக்கும், இதனால் அவற்றால் நீரில் எளிதாக நீந்த முடியும்.



இவைகளின் மூக்கு நீளமாகவும் வளைந்தும் இருக்கும்; இது மீன்களைப் பிடிக்க உதவுகிறது.





இவைகளின் சிறகுகள் நீளமாகவும் ஒடுங்கியும் இருக்கும். இதனால் இவற்றால் தொலை தூரம் பறக்க முடியும்.

## நீங்கள் காணக்கூடிய கடல் பறவைகள்




இவை பெரும்பாலும் குளிர்காலம் மற்றும் கோடைக்காலத்தில் காணப்படும். பொதுவாக இவை கடற்கரையிலும் அல்லது கடலுக்கு அருகிலும் காணப்படுகின்றன.



## கவனமாக இருங்கள் - இந்த தவறுகளைச் செய்யாதீர்கள்



**மூடப்படாத தலைப்பகுதி:** பறவையின் தலையை மூடாமல் விடாதீர்கள்; ஒரு துணியால் மெதுவாக மூடுங்கள், இதனால் பறவைக்குப் பயமோ பதட்டமோ ஏற்படாது.

**கண்டெய்னர் இல்லாமல் பறவையை எடுத்துச் செல்லாதீர்கள்:** பறவையைக் கையால் பிடித்து எடுத்துச் செல்ல வேண்டாம்; எப்போதும் ஒரு பெட்டி அல்லது கேரியரைப் பயன்படுத்துங்கள்.





**பறவைகளை வெளியில் விடாதீர்கள்:** பறவைகளை வெளிப்புறத்தில் திறந்த இடத்தில் விட வேண்டாம்; அவற்றை எப்போதும் பெட்டிக்குள் அல்லது பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

# நீங்கள் ஏதாவது ஒரு இறந்த கடல் பறவையை கண்டால்-


- தகவலை உடனடியாக குழுவிற்கு (அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு) தெரிவிக்கவும்.
- ѕஎத்த உடலின் நிலையைப் பொறுத்து, அதைச் சேகரிக்கவோ அல்லது புதைக்கவோ வேண்டியிருக்கும்.
- எந்தத் தொற்றும் ஏற்படாமல் இருக்க ஒருமுறை பயன்படுத்தும் முகக்கவசம் (Disposable Mask) மற்றும் கையுறைகளை (Gloves) அணியவும்.
- பறவையைக் காற்று புகாத பிளாஸ்டிக் பையில் (Airtight Polythene Bag) , வைக்கவும்; அதை வனத்துறையினரிடமோ அல்லது ரீஃவாட்ச் குழுவிடமோ ஒப்படைக்கும் வரை பாதுகாப்பாக வைத்திருங்கள்.



கோவாவில் வெட்ஜ்-டெய்ல்டு ஷியர் வாட்டர் (Wedge-tailed Shearwater) முதல் முறையாக கண்டறியப்பட்டது; அது கூட இறந்த நிலையில் கடற்கரையில் கரை ஒதுங்கிக்கிடந்தது.



# நீங்கள் காணக்கூடிய கடல் பறவைகள்




இவை பெரும்பாலும் மழைக்காலத்தில் காணப்படும். இவை திறந்தவெளி மற்றும் ஆழமான கடல் பகுதிகளில் வாழ்கின்றன; எனவே இவை ஆழ் கடல் பறவைகள் (Pelagic Sea Birds) என்று அழைக்கப்படுகின்றன.

# அறிக்கை

**எப்போது அளிக்க வேண்டும்?**

- பறவையைத் தூரத்திலிருந்து கவனமாகப் பாருங்கள்.

பறவைக்குக் காயம் ஏற்பட்டுள்ளதா





பறவையால் பறக்க முடியவில்லையா?

அல்லது ஏதாவது ஒன்றில் /நூலில் சிக்கியிருக்கிறதா





# கொண்டுசெல்லுதல்

- பறவையை எடுத்துச் செல்லும்போது, காற்றோட்டமுள்ள கூண்டு அல்லது மேற்பகுதியில் சிறிய துளைகள் உள்ள அட்டைப் பெட்டியைப் பயன்படுத்துங்கள்; இதனால் உள்ளே காற்றோட்டம் கிடைக்கும்.
- பறவையை அடிக்கடி தொடாதீர்கள்; கூண்டை மூடி அமைதியான இடத்தில் வைத்திருங்கள். இதனால் பறவைக்கு பயம் அல்லது பதட்டம் ஏற்படாது. ஏனெனில் பறவைகள் சத்தம் மற்றும் அசைவுகளுக்கு மிகவும் உணர்ச்சிவசப்படுபவையாகும்.
- மழைக்காலம் அல்லது குளிர்காலத்தில், கூண்டை 24°C -30°C க்கு இடைப்பட்ட சூடான இடத்தில் வைத்திருங்கள், இதனால் பறவையைக் குளிர் தாக்காது.
- கொண்டுசெல்லும் போது அதிர்வுகள் அல்லது திடீர் குலுக்கல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதனால் பறவை பயப்படாமல் பாதுகாப்பாக இருக்கும்.



# கடல் பறவைகளைக் கையாளுதல்

சிறிய பறவைகளை தூக்கும் போது:

- ஒரு கையால் சிறகுகளின் முனை, கால்கள் மற்றும் வயிற்றுப் பகுதியை நன்றாகப் பிடிக்கவும்.
- மற்ற கையால் பறவையின் சிறகுகளை ஒரு துணியால் மூடுங்கள்.

பெரிய பறவைகளைத் தூக்கும் போது:

- ஒரு கையை பறவையின் நெஞ்சின் கீழ் வைத்து, அதன் உடல் எடையை தாங்கிப்பிடிக்கவும்.
- மற்ற கையால் சிறகுகளின் முனையும் கால்களையும் மெதுவாகப் பிடிக்கவும்.

மற்றொருவர் பறவையின் தலையை ஒரு துணியால் மூடுவது சிறந்த முறையாகும். இதனால் அது அமைதியாக இருக்கும்.









# அறிக்கை

## எப்படி அறிவிப்பது?

- எப்படி அறிவிப்பது?
- உங்கள் பகுதியில் இருக்கும் வனத்துறை அதிகாரிகளை உடனடியாகத் தொடர்பு கொண்டு நிகழ்வைத் தெரிவிக்கவும்.
- பறவையைப் பயமுறுத்தாமல் அல்லது தொந்தரவு செய்யாமல், அதன் காயங்களைப் புகைப்படம் எடுக்கவும்.

புகைப்படம் ஜியோ-டேக்டு (Geo-tagged) செய்யப்பட்டதாக இருந்தால் மிகவும் நல்லது. புகைப்படம் எடுக்கும் போது, முழு பறவையும் தெளிவாகத் தெரியும்படி பக்கவாட்டுக் காட்சியாக (side view) எடுக்கவும்.






# காயமடைந்த பறவையைத் தூக்குவதற்கு முன் உங்கள் உபகரணங்களைச் சரிபார்க்கவும்



1. சரியான அளவுடைய, சுத்தமான கூண்டு அல்லது அட்டைப் பெட்டி.



2. பறவையையும் பெட்டியையும் மூடுவதற்கான ஒரு துணி



3. பாதுகாப்பு உபகரணங்கள் கையுறைகள் மற்றும் முகக்கவசம்.

# கடல் பறவைகளைப் பிடித்தல்

1. பறவைக்கு அருகே மெதுவாகவும் அமைதியாகவும் செல்லுங்கள். பறவை மன அழுத்தத்தின் காரணமாக பயப்படுகிறது என்றால் அதைப் பிடிப்பதற்கு மற்றொருவரின் உதவியைப் பெறுங்கள்.

2. பறவையின் மீது மெதுவாக ஒரு துணியைப் போடுங்கள், அதன் முழு உடலையும் அதில் சுருட்டி, தலையையும் மூடுங்கள்.இது பறவையின் பதட்டத்தைக் குறைக்கும் மற்றும் பிடிக்கும் நபருக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

3. சிறகுகள் மற்றும் கால்களை சரியான நிலையில் வைத்துப் பிடியுங்கள்; தேவையற்ற அசைவுகள் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள், இதனால் காயம் ஏற்படும் ஆபத்து குறையும்.

4. பறவை சுவாசிப்பதற்கு வசதியாக இருப்பதைக் கவனியுங்கள். அலகு மற்றும் நெஞ்சுப் பகுதியை மெதுவாகப் பிடியுங்கள்; அதிகமாக அழுத்த வேண்டாம். இதனால் பறவைக்கு சுவாசிப்பதற்கு எந்தச் சிரமமும் ஏற்படாது